செ. கு. எண்: 125 நாள்: 08.09.2016

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 8.9.2016

சென்னை, தண்டையார்பேட்டை வட்டம், புது வண்ணாரப்பேட்டை, திடீர் நகரைச் சேர்ந்த திரு. தங்கராஜ் என்பவரின் மகன் திரு. மகேந்திரன், 7.9.2016 அன்று திடீர்நகர் 1-வது தெரு சந்திப்பில் உள்ள பிள்ளையார் சிலை அருகில் கட்டியிருந்த வாழை மரத்தினை தொட்ட போது, மின்சாரம் தாக்கியதில் காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. மகேந்திரன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. மகேந்திரனின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறுமாறு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. P.பென்ஜமின் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு) ஆகியோருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. மகேந்திரனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.